பொதுசன நூலகம் மாநகராட்சி மன்று யாழ்ப்பாணம் 06-10-1992

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 19 திங்கட்கிழமை (05-10-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 312

# ரூ. 5 கோடி பெறுமதி ஆயுதங்களை கட்டைக்காட்டில் படை இழந்தது!

## ராணுவம் ஒப்புக் கொள்கிறது; விசாரணைக்கு அரசு உத்தரவு

கொழும்பு, அக்டோபர் 5

கடந்த வெள்ளிக்கிழமை ஆனையிறவு — கட்டைக்காட்டில் படையினரின் காவலரண்கள் மீது தாக்குதல் நடத்தி, ஐந்து கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிச் சென்றனர். — இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவத் தரப்பு இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறது.

இராணுவப் போராட்ட வரலாற்றில் முன் எப்போதும் இல்லாதவாறு விடுதலைப் புலிகள் சாதனை நிகழ்த்தியிருக்கும் இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் இழக்காத அளவு — பெருந்தொகை — ஆயுதங்களை புலிகள் இத் தாக்குதலில் கைப்பற்றினர் என்பதையும் இராணுவத் தரப்பு ஒப்புக் கொண்டுள்ளது.

1990 ஜூனில் சண்டை மீண்டும் ஆரம்பித்த பின்னர் இது போன்றதொரு பெரும் ஆயுத இழப்பை சந்தித்தது இல்லை என்றும் —

கூட்டமாக விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள் ஆயுதங்களைக் கவர்ந்து செல்வதைத் தடுக்க இராணுவத்தினர் எவ்வளவோ வீரமாகப் போராடியும் அது இயலாமற் போனது என்றும் —

விடுதலைப் புலிகள் கைப்பற்றிச் சென்ற ஆயுதங்களின் மதிப்பு இலங்கைப் பணத்தில் ஐந்து கோடி ரூபா இருக்கும் என்றும் இராணுவ தரப்புத் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் இத் தாக்குதலை நடத்தி ஆயுதங்களைக் கைப்பற்றிச் சென்ற விஷயம் குறித்து விசாரணை நடத்த அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் — இராணுவத் தரப்பில் — யாராவது குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர்கள் இராணுவ நீதிமன்றம் மூலம் தண்டிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவ வட்டாரங்களின் தகவல்படி —

விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் 50, இயந்திரத் துப்பாக்கிகள் 2, மோட்டார் குண்டு ஏவும் பீரங்கி, றொக்கட்டுகள், தானியங்கி துப்பாக்கிகள் 180, மற்றும் ஏராளமான சிறிய குண்டுகள்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்பு நிதி செலுத்த மீண்டும் வாய்ப்பு

யாழ்ப்பாணம், அக். 5

இதுவரை தமிழீழ மீட்பு நிதி செலுத்தாத — வசதி படைத்தோர் — 10 ஆயிரம் ரூபாவைக் கடனாக வழங்கி, தமிழீழ விடுதலைப் போரில் தங்கள் பங்களிப்பைச் செய்வதற்கு ஒரு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

வியத்தகு வெற்றி

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகக் கடினமான நீண்ட தூரத்தைக் கடந்து வந்துள்ளோம். ஸ்ரீலங்கா அரசினதும் படைகளினதும் ஒடுக்குமுறைக் கொடுமைகள், அட்டூழியங்கள், இந்திய வல்லாண்மையின் கொடுங்கோன்மைகள் ஆகியவற்றின் இடையேயும் முழு உலகமும் வியக்கத்தக்க வெற்றிகள் பலவற்றைப் பெற்று தமிழீழத்தின் விடுதலையை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறோம்.

எமது வெற்றிகளுக்கு அடித்தளமாக அமைந்தவை எமது தலைவரின் ஆளுமையும் தூர நோக்கும், விடுதலைப் புலி

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினர் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 5

மாதகல் — திருவடிநிலை கடற்பிராந்தியத்தில் இருந்து நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கடற்படையினர் கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

சில்லாலைப் பகுதிகளில் அதிகமான பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ–15)

## யாழ். கடலேரிப் பகுதியில் மின்னல் தாக்கி மீனவர் பலி!

குருநகர், அக். 5

யாழ். கடலேரிப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் இடி மின்னல் தாக்கியதில் உடல் எரியுண்டு பலியானார். அவரது சகோதரர் காயமடைந்தார்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குருநகர் றெக்கிளமேசன் வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ரவீந்திரன் சவுரியான் குட்டி (34 வயது) என்பவரே மரணமானார்.

சவுரியான் வின்சன் சகாஸ் (32 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

(ஒ-15-51-17)

## இன்று தேர்

யாழ்ப்பாணம், அக். 5

வண்ணார்பண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான தேர்த் திருவிழா இன்று காலை நடைபெறுகிறது.

காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி 9.15 மணிக்கு வேங்கடேசப் பெருமானின் தேர்ப் பவனி ஆரம்பமாகும்.

நாளை மு. ப. 10 மணிக்கு தீர்த்தோற்சவமும், புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.

(தேர்த்திருவிழா சிறப்பிதழ் 3-ஆம் பக்கம்) (ஏ–ப)

அவசர நோயாளருக்காக

## யாழ்ப்பாணம் – கொழும்பு ஹெலி சேவை நடத்த முயற்சி!

யாழ்ப்பாணம், அக். 5

யாழ். போதனா வைத்திய சாலையில் உள்ள அவசர நோயாளர்களை கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்கு வசதியாக யாழ்–கொழும்பு ஹெலி சேவை ஒன்றை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

இந்த முயற்சி வெற்றியளித்தால் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொடியுடன் உபாலி நிறுவனத்தின் ஹெலிக்கொப்டர்கள் யாழ் மத்திய கல்லூரி விளையாட்டரங்கில் தரையிறக்கி அவசர நோயாளர்களை கொழும்புக்கு அழைத்துச் செல்லும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரியில் தற்சமயம் உயிருக்காக போராடிக் கொண்டிருக்கும் இளம் பெண் டாக்டர் ஒருவரை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படை யாழ். வர முயன்றால் அது முட்டாள்தனமாகும்!

### அன்ரன் பாலசிங்கம் பேட்டி

லண்டன், அக். 5

"யாழ்ப்பாணத்துக்குள் வர இராணுவம் தீர்மானித்தால் அது முட்டாள்தனமாகும். ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான இந்திய ராணுவத்தால் யாழ்ப்பாணத்தை தக்க வைத்திருக்க முடியவில்லை. இலங்கை இராணுவத்தால் அது எப்படி முடியும்?"

— இப்படிக் கேள்வி எழுப்பினார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்.

"யாழ்ப்பாணத்துக்குள் வர இராணுவம் தீர்மானித்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்" — என்று பி. பி. ஸி.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் இணைந்து கொழும்பில் கொள்ளை

கொழும்பு, அக். 5

கொழும்பையும் அதனை அண்டிய பகுதிகளிலும் கொள்ளைச் சம்பவங்களில் பொலிஸ், கடற்படை, சிறைக் காவலர் அடங்கிய குழு ஒன்று ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் வீடுகள் பலவற்றை உடைத்து நகைகள், பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துள்ளனர்.

இக் குழுவைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் இரண்டு ரிசேவ்பொலிஸ் கான்ஸ்டபிள்கள், கடற்படைச் சிப்பாய் ஒருவர், சிறைக்காவலர் ஒருவர் ஆகியோர் வெள்ளவத்தைப் பொலிஸாரால் கைது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பெலவத்த, வீரவிலவில் உண்ணாவிரதப் போர் இடைநிறுத்தப்பட்டது!

தென்னிலங்கையில் உள்ள பெலவத்த, வீரவில தடுப்பு முகாம்களில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருந்த தடுப்புக் காவல் கைதிகள் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தமது கோரிக்கைகளை நிறைவேற்ற ஸ்ரீலங்கா அரசு அதிகாரிகளுக்கு ஒரு மாத கால அவகாசத்தை அவர்கள் வழங்கியிருப்பதாகவும் —

இக்கால எல்லைக்குள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் மீண்டும் தாம் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக அவர்கள் எச்சரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (உ–10)

தாவரம் வளர்ந்தோங்க
தரணி சிறந்தோங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சித்ராலயா ★

# இடம்மாற்றம்

இதுவரை காலமும் கோவில் வீதி 'நல்லூரில்' இயங்கிவந்த எமது நிறுவனம் 05 - 10 - 1992 திங்கள் (இன்று முதல்) ஸ்ரான்லி வீதியில் உள்ள மழைய இடத்தில் இயங்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

[5361]



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L - 93** பகல் நேர வகுப்பு

(செவ்வாய், வியாழன்)

**பொருளியல்:** திரு. கலாகரன்

வினா - விடை — [8-00 a.m. — 9-30 a.m.]
பாடத்திட்டம் — [9-30 a.m. — 11-00 a.m.]

**கணக்கியல்:** திரு. S.K. பிரபாகரன்

வினா - விடை — [12-30 p.m. — 2-00 p.m.]
பாடத்திட்டம் — [11-00 a.m. — 12-30 p.m.]

**அளவையியல்:** திரு. A. பிரபாகரன்

வினா - விடை — [9-30 a.m. — 11-00 a.m.]
பாடத்திட்டம் — [8-00 a.m. — 9-30 a.m.]

**வர்த்தகம்:** திரு. R. ரகுநாதன்

வினா - விடை — [11-00 a.m. — 12-30 p.m.]
பாடத்திட்டம் — [12-30 p.m. — 2-00 p.m.]

(கி-3556)


## ஓராண்டு நினைவஞ்சலி



ஜேர்மனியில் அகால மரணமடைந்த

### தர்மலிங்கம் சௌந்தர்ராஜன்
### சௌந்தர்ராஜன் விஜயகுமாரி
### சௌந்தர்ராஜன் சபீலா

| அன்னை மடியில்: | இறைவனடியில்: |
|---|---|
| 20-03-1958 | 18-10-1991 |
| 14-09-1965 | 18-10-1991 |
| 02-12-1985 | 18-10-1991 |

திதி: 06 — 10 — 1992

கண்ணிறைந்த கட்டழகா எங்கள் ராஜனே!
மணம் முடித்து மாலை சூடி மங்கை விஜி
தன்னுடனே மாண்பான ஜேர்மனியில்
மேன்மையுற வாழ்கையிலே
வண்ணமயில் வடிவழகி
வந்துதித்தாள் சபீலாவும்
கண்மணிகள் மூவருமாய் சுவிஸ் நாட்டின்
அக்கா அத்தான் குடும்பத்தோடுறவாட
எண்ணியே செல்கையிலே மூவருக்கும்
வந்தவண்டி கதை முடித்து வைத்ததுவோ
ஆண்டொன்று சென்றதையோ
அன்னை சிந்தும் கண்ணீருக்கு
அணைபோட முடியவில்லையே

தந்தை, தாய்,
சகோதரர்கள், மச்சான்மார்,
மருமக்கள்.

'மோகன் வீதி',
(கலட்டி வீதி),
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

[22771]

## குடிதண்ணீர் திட்டம்

யாழ் மாநகர சபைப் பிரிவில் ஆறு மினி குடிதண்ணீர் திட்டங்களையும் செயல் படுத்த ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவி வழங்கவிருக்கிறது.

இத் திட்டத்தின் கீழ் ஆறு நீர்ப்பம்புகளை வழங்கவும் அந்த அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின்படி பொது இடங்களுக்கு மட்டும் குடிதண்ணீர் வழங்கப்படும். வீடுகளுக்கு வழங்கப்படமாட்டாது. [உ-3]

# மானம்பு திருவிழா

யாழ்ப்பாணம், அக். 5

நவராத்திரி திருவிழாவின் இறுதி நாளான இன்று, ஆலயங்களில் மாலையில் மானம்பு [மாநோன்பு] விழாவும், வன்னி வாழை வெட்டுதலும் இடம்பெறும்.

★ அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலயத்தில் மானம்பு திருவிழா நடைபெறும். சித்திவிநாயகர் ஆலயத்தில் இருந்து சுவாமி கண்டி வீதிவழியாக மகாமாரி அம்மன் கோவிலைச் சென்றடைந்து அங்கு மானம்பு நடக்கும்.

★ வட்டுக்கோட்டை கன்னகாம்பிகா சமேத கன்னலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மானம்பு நடைபெறும். சுவாமி சங்கரத்தை இலுப்பையடி வயிரவர் ஆலயத்துக்கு எழுந்தருளி அங்கு வன்னி வாழை வெட்டு வைபவம் நடைபெறும்.

★ தெல்லிப்பழை கோயிற்புலம் அண்ணமார் (சிவன்) ஆலயத்தில் நவராத்திரியின் இறுதி நாளான இன்று மாலை மானம்பு திருவிழா நடைபெறும்.

★ சரசாலை வீரமாகாளி அம்மன் ஆலயம், சாவகச்சேரி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகியவற்றிலும் இன்று மானம்பு விழா நடைபெறுகிறது. [அ-17-31]

## மீட்பு நிதி செலுத்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களின் வீரமும், ஈகமும் மட்டுமன்றி எது நடந்தாலும் இறுதிவரை எம்மண்ணிலேயே வாழ்வோம் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வரும் தமிழீழ மக்களின் மனஉறுதியும், பங்களிப்புமேயாம்.

பல்வேறு நெருக்கடிகளை விடுதலைப் புலிகள் எதிர்கொண்ட போதெல்லாம் பக்கத்துணையாய், பங்காளர்களாய், காவலரணாய் நின்றவர்கள் தமிழீழ மக்கள்.

### அன்றும் இன்றும்

1983 ஜூலை 23 இல் சிங்களப் படையினர் 13 பேர் கொல்லப்பட்டபோது தமிழீழத்துக்கு வெளியே ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்டனர்; தமிழ்ப் பெண்கள் பலர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர்; பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் சூறையாடப்பட்டன; தமிழர்கள் தஞ்சம் தேடி தமிழீழத்துக்கு ஓடிவந்தனர். சிறீலங்கா அரசு அந்தக் கலவரத்தின் பின்னணியில் இருந்து செயற்பட்டது.

1983க்குப் பின்னர் இன்றுவரை ஆயிரக்கணக்கில் சிங்களப் படையினர் போரில் கொல்லப்பட்டுள்ளனர். 08-08-92 அன்று சிங்களப் படையின் அதிஉயர் தளபதிகள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர். அன்று தமிழர்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்ட வன்முறை வெறியாட்டம் இன்று சிங்கள அரசுக்கு எதிராகத் திரும்பியுள்ளது. இந்தக் கலவரத்தில் அமைச்சர்கள் தாக்கப்பட்டுள்ளனர்; அரச சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. சிங்கள அரசியலாளர்கள் தமிழர்களைப் பகடைக்காயாக பயன்படுத்திய காலம் மலையேறிவிட்டது என்ற உண்மை இதிலிருந்து புலனாகிறது. சிங்களவரின் இத்தகைய மனமாற்றம் விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போரின் விளைவேயன்றி வேறில்லை.

### ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்புச் செலவினம்

1977 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசின் உண்மையான பாதுகாப்புச் செலவினம் 43 கோடி 58 லட்சம் ரூபாவாகும். 1991 இல் இத்தொகை ஆயிரத்து 566 கோடி 37 லட்சம் ரூபா. 1992 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டப் பாதுகாப்புச் செலவின ஒதுக்கீடு ஆயிரத்து 542 கோடி 40 லட்சம் ரூபா. இத்தொகை துணை ஒதுக்கீட்டினூடாக 2,000 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆண்டு முடிவில் உண்மையான செலவினம் 2,000 கோடி ரூபாவை விஞ்சிவிடலாம்.

எம்மைப் பொறுத்தவரை மிகக் குறைந்த வளங்களுடன் —ஸ்ரீலங்கா அரசின் பொருண்மியத் [பொருளாதாரம்] தடைகளுக்கு இடையே— 2,000 கோடி ரூபாவை செலவு செய்யும் சிங்கள அரச படையுடன் போர் புரிகிறோம். நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடுதலைப் போர் தமிழீழ மக்களால் நடத்தப்படும் போரேயாகும். போரில் வெற்றி பெறுவதற்கு தமிழீழ மக்கள் தம்மாலான அனைத்தையும் செய்ய வேண்டும். இது அவர்களது வரலாற்றுக் கடமையாகும்.

தமிழீழ மீட்பு நிதிக்கான கடனை நாம் திரட்டத் தொடங்கிய போது இக் கடனைத் திருப்பித் தருவார்களா என்று ஐயப்பட்டவர்களும் உண்டு. ஆனால் நாம் திருப்பிச் செலுத்தி வருகிறோம். தமிழீழ மீட்பு நிதிக்கு உதவக்கூடாது என்ற நோக்கம் கொண்டிருந்த வசதி படைத்த சிலரிடம் நாம் இரண்டு பவுணுக்கு மேலாக வற்புறுத்தி வாங்கியது உண்மையே.

நாம் கடனை மீளளிக்கத் தொடங்கியவுடன் இது ஓர் ஏமாற்று வேலை என்றார்கள் சிலர். ஆயினும் தொடர்ந்தும் நாம் மீளளித்து வருகிறோம். பெறுக்க முடியவில்லை, மீண்டும் கூடுதலாகப் பெறுவதற்காகவே இரண்டு பவுணை நாம் மீளளிப்பதாக கதைகளைக் கட்டி விட்டார்கள். இதனால் கடனை மீளளிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிற் சிலர் மீளப் பெறுவதற்குத் தயங்கினார்கள். ஆனால் மீண்டும் மீண்டும் அவர்களுக்கு உண்மை நிலையைத் தெளிவு படுத்தி திருப்பிக் கொடுத்துவிட்டோம்.

இந்த நேரத்தில் இதுவரை மீட்பு நிதிக்கடன் திட்டத்தில் பங்கேற்காத — வசதி உள்ளவர்கள் — 10 ஆயிரம் ரூபாவை மட்டும் கடனாகத் தந்துதவி, தமிழீழ விடுதலைப் போரில் தங்கள் பங்களிப்பைச் செய்வதற்கு ஒரு வாய்ப்பைத் தர முடிவு செய்துள்ளோம். இந்த வாய்ப்பினை பயன்படுத்துமாறு வசதியுள்ள அனைவரையும் வேண்டி நிற்கிறோம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [௳]

## பாரதி விழா

யாழ்ப்பாணம், அக். 5

யாழ். பாரதி இளைஞர் அறிவியற் கழகத்தினரின் பாரதிவிழா அண்மையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பட்டிமன்றம், வில்லிசை, கவியரங்கு, இசையரங்கு, உரையரங்கு, நாடகம் என்பன இடம்பெற்றன.

யாழ். பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி. வேலாயுதம் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். [ம]

## தொண்டர் ஆசிரியரும் விண்ணப்பிக்கலாம்

யாழ். மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்கள், தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியில் சேர்ந்து கொள்வதற்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

மகரகமவில் அமைந்துள்ள தேசிய கல்வி நிறுவனத்தின் தொலைக்கல்விப் பிரிவின் ஆசிரியர் பயிற்சி நெறிக்கு 1993ஆம் ஆண்டிற்கு பயிற்சி ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சி நெறியில் சேர்ந்து கொள்வதற்கு அண்மையில் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்களும் தகுதி பெற்றுள்ளனர்.

அக்டோபர் 13ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என தேசிய கல்வி நிறுவகம் அறிவித்துள்ளது. [த-11]

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

கருவறை வாயினிலே! 23-01-1934

காலனின் பிடியினிலே! 05-09-1992

அமரர்

### நாகலிங்கம் நாகரத்தினம்

திடீரென்று வந்தான் காலன்
தீயினில் வெந்தது உடல்
காற்றினிலே கலந்தது ஆத்மா
கண்ணீரில் கரைந்தது மனம்.

தந்தையை இழந்து நிற்கும் சத்தியமூர்த்தி அவர்களுக்கும், துயர் கடலில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இறையடி சேர்ந்த ஆன்மா, சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"வெள்ளைக் குதிரைகள்"
பரி.யோவான் முதலுதவிப் படையினர்,
வலி, வடக்குப் பிரதேசம்.

(4985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள்

தேவஸ்தான

# ★ தேர்த்திருவிழா சிறப்பிதழ் ★

05—10—1992

# பெருமாள் கோவில் சரித்திரமும் சிறப்பும்

ஈழவள நாட்டிலே அமைந்துள்ள வைணவ ஆலயங்களுள் முதன்மையானவற்றுள் ஒன்றாகக் கணிக்கப்படும் இவ்வாலயம் யாழ்ப்பாண மாநகரின் மத்தியில் வண்ணார்பண்ணையில் அமைந்துள்ளது; இவ்வாலயம் வானளாவிய கோபுரமும் வண்ணமிகு விமானமும் சீராகு மாலிருஞ்சோலையுடன் பிரகாரம் தாளதாமரைத் தடாகங்கள் சூழ்ந்த எழிலுடன் திகழ்கிறது. இத்திருக்கோவில் மூர்த்தி, தலம் தீர்த்தங்களால் மகிமை பொருந்தி அருள்மிகு ஸ்ரீதேவி, பூதேவி சமேத வேங்கடேஸ்வரசுவாமியும், வரதராஜசுவாமியும் வீற்றிருந்து அருள்பாலித்து வருவது சிறப்பம்சமாகும்.

இக்கோயிலின் சரித்திரமும் இதனைக் கட்டிப்பராமரித்து வரும் பண்டாரவாளச் செட்டிப்பிள்ளைகளாகிய பத்மசாலிகளின் சரித்திரமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. கி.பி. 1347 இல் செகராஜசேகரன் என்ற பட்டத்துடன் முடிசூட்டப்பட்ட குணபூஷண சிங்கையாரி தமது காலத்தில் நெசவுத் தொழிலை விருத்தி செய்வதற்காக ஆந்திராவில் இருந்தும் காஞ்சியிலிருந்தும் பண்டாரவாள செட்டிப்பிள்ளைகளாகிய பத்மசாலிகளைக் கொண்டுவந்து வண்ணார்பண்ணையில் குடியமர்த்தினான்; இவர்கள் தமது வைணவ சமய அனுட்டானங்களை மேற்கொள்வதற்காக இக்கோயிலைக் கட்டினார்கள் என்றொரு ஐதீகம் உண்டு.

## ஒல்லாந்தர் காலத்தில்

கி.பி. 1965இல் ஒல்லாந்தர் குன்றிப்போய் இருந்த நெசவுத் தொழிலை மேலும் விருத்தி செய்யும் நோக்கத்துடன் தென் இந்தியாவில் இருந்து நெசவாளர்களைக் கொண்டு வந்து வண்ணார் பண்ணையிலே குடியமர்த்தினார்கள், கிறிஸ்தவ சமயத்தின் விருத்தியில் மட்டும் அக்கறை கொண்ட ஒல்லாந்தர் இச் சாகித்தியத்தார் தமது வைணவ சமய அனுட்டானங்களை சுவாதீனமாக செய்வதற்கு எதுவித தடையும் விதிக்கவில்லை. நெசவுத் தொழிலில் அதிகலாபம் ஈட்டலாம் என்ற காரணத்திற்காக இச்சுவாதீனம் இவர்களுக்கு வழங்கப்பட்டது.



இவ்வாலயம் அமைந்துள்ள நிலமும் அதனைச் சூழவுள்ள நிலங்களும் 'அடியார்க்கு நல்லான் வரம்பு' என்று உறுதி சாதனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன; சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லானும், சிங்கை நகர் அமைச்சராக இருந்த அடியார்க்கு நல்லானும், இவ்வுறுதி சாதனங்களில் சுட்டப்பட்டுள்ள அடியார்க்கு நல்லானும் ஒருவரே என்றும், இவர். கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்றும் சிலர் கூறுவர்.

## பலாமரம் தல விருட்சம்

இக்கோயிலின் தல விருட்சம் பலா மரமாகும். ஆலயத்தின் உள்வீதியில் இலக்குமி அம்மன் கோவிலுக்குப் பின் பக்கத்தில் அமைந்திருந்த இவ் விருட்சம் காலகதியாகி இறந்து போக புதிய கன்று நாட்டப்பட்டு, வளர்ந்து காணப்படுகிறது;

கோயில் கட்டுவதற்கு முன் இச்சாகித்தியத்தைச் சேர்ந்த பெரியார் ஒருவர் அழிந்த

## தேவஸ்தான அறங்காவலர் சபை

போன பலாமரத்தினடியில் வேங்கடேசர் விக்கிரகத்தை வைத்து வழிபட்டு வந்தாரென்றும் அதிலிருந்தே இக்கோயில் உற்பத்தியாகியதென்றும் ஒரு ஐதீகமிருக்கின்றது; அந்த ஆதிகாலம் தொட்டு வணங்கி வரப்பட்ட சிறிய விக்கிரகத்திற்கு கொடியேற்றத் திருவிழா காலத்தில் குறிப்பாக தீர்த்தத் திருவிழா வென்றும் விடையாத்தித் திருவிழாவென்றும் விசேஷ பூசைகள் நடைபெற்று வருகின்றன. அத்தோடு இச் சிறிய விக்கிரகத்திற்கு மாதம்தோறும் வருகின்ற சுக்கில பக்ஷ அமர பக்ஷ ஏகாதசி தினங்களில் பூஜை நடத்தி உள் வீதி வலம் செய்யப்படுகிறது.

## தரும சாதன நிலங்கள்

கி.பி. 1820 ஆம் ஆண்டில் இருந்து கோயிலுக்கு நிலங்கள் மேற்படி சமூகத்தோரால் தரும சாதனம் செய்யப்பட்டு வந்துள்ளன. 1850 ஆம் ஆண்டு கோயில் நிர்வாகிகள் சில மங்களவாத்தியகாரரை சேவகத்திற்காக ஏற்படுத்தியதாக அவ்வாண்டு எழுதப்பட்ட உறுதி சாதனம் ஒன்றில் காணப்படுகின்றது. 1870, 1878, 1901, 1908, 1927, 1942, 1964, 1974, 1987 ஆகிய ஆண்டுகளில் எழுதப்பட்ட பராமரிப்புத் தத்துவ உறுதி சாதனங்கள் இருக்கின்றன.

பண்டாரவாளச் செட்டிப்பிள்ளைகள் என்ற பத்மசாலிகளாலேயே இக்கோயில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவர்கள் கோயிலின் ஆதீனமகா சபை அங்கத்தவர்கள்; இவ் ஆதீன மகா சபையினரே காலத்திற்குக் காலம் கோயில் பராமரிப்புத் தத்துவகாரரை நியமித்து உறுதி சாதனம் முடித்துக் கோயில் கைங்கரியங்களை செய்விக்கின்றனர். வருடா வருடம் கோயில் கணக்குகள் இச்சபையின் முன் சமர்ப்பிக்கப்பட்டு சரிபார்க்கப்படுகின்றன. இக்கோயிலின் சகல உரிமைகளும் இச்சபையாருக்கே சொந்தமாக இருக்கின்றன;

இச்சாகியத்தாரில் வைணவர்களும் வீரசைவர்களும் இருக்கின்றார்கள். இவர்களின் உறவினர்கள் இந்தியாவின் பல பாகங்களிலும் வசிக்கிறார்கள். இவ்வாலயம் வைஷ்ணவ முறைப்படி வைஷ்ணவர்களால் நிர்வாகிக்கப்படுகிறது.

இவ் விஷ்ணு ஆலயத்தில் வைகானச முறைப்படி கிரியைகள் நடைபெறுகின்றன. ஆந்திராவில் உள்ள திருப்பதி வேங்கடேஸ்வர சுவாமி தேவஸ்தான விதிமுறைகளை இங்கும் பின்பற்றுகிறார்கள். 1884 இல் ஒரு கும்பாபிஷேகமும், 1941, 1952, 1964, 1984 ஆகிய ஆண்டுகளில் சம்ரோக்ஷண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகங்களும், 1978 ஆம் ஆண்டு இராஜகோபுர மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றன.

## சித்திரத் தேர்

1907 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டுத்தேர் பழுதடைந்ததைத் தொடர்ந்து 1960 ஆம் ஆண்டு புதிய சித்திரத் தேர் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. இத் தேரின் அடித்தளத்தில் இராமாயணம், மகாபாரதம், பாகவதம் முதலிய நூல்களிலுள்ள வரலாறுகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டு கண்ணிற்கு

(5 ஆம் பக்கம் பார்க்க)

# வெம்பகையால் அல்லலுறும் அடியார் துயர் களைய அச்சுதனை வேண்டிடுவோம்

ஈழநாட்டில் வண்ணை மாநகரில் காத்தல் கடவுளும் வேதமுதல்வனுமாகிய ஸ்ரீமந் நாராயணன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பதி வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலாகும். பெருமாள் கோயில் என்றவுடன் எல்லோர் மனதிலும் எழுவது அதன் வானளாவிய வண்ணமிகு கோபுரமும், சிற்பங்கள் நிறைந்த சித்திரத் தேருமாகும். இது ஈழம் வாழ் வைணவர்களின் முக்கிய தலமாகும்.

இன்று பெருமாள் கோயில் தேர்த்திருவிழா ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீ தேவி, பூதேவி சமேதராக பக்தர்கள் கூட்டம் கோவிந்தா! கோவிந்தா! என கரகோசம் எழுப்ப, மங்கள வாத்தியங்கள் முழங்க, சித்திரத் தேரேறி வீதி உலா வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அநாதை ரட்சகன், ஆபத்பாந்தவன் அடியார்கள் துயர் தீர்க்க அருந் தேரேறி வரும் வடிவழகை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. அன்று பார்த்தனுக்குச் சாரதியாய் தேரேறி பாரதப்போர் முடித்தாய்! இன்று பக்தருக்கு பாதுகாவலனாய் தேரேறி அவர்தம் பழவினை முடிப்பாய்! கொடும் வெம்பகையால் அல்லலுறும் மக்கள் துயர் துடைப்பாய்! நல்லகுருநாதன் வருத்துவது நம்மை கொல்லவல்ல கொல்லவல்ல பொல்லாவினை அறுக்கவே;

கிருஷ்ண பகவான் கீதையிலே கூறுகின்றார் "நல்லாரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் அறத்தை நிலை நிறுத்தவும் நான் யுகம் தோறும் பிறக்கின்றேன்" இந்த அருள்வாக்கு பகவானால் தேரிலிருந்தே அருச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. இத்தேர்த் திருவிழா அன்று இதனை நினைவு கூருவது சாலச் சிறந்ததாகும். வைணவர்கள் இவ்வருள்வாக்கில் அசையாத நம்பிக்கை வைத்துள்ளார்கள்; ஸ்ரீமந் நாராயணன் யுகந்தோறும் அவதாரம் எடுத்து மக்களைக் காத்து வந்தார்; அவ்வவதாரங்கள் பத்து எனக் கொள்வர்; அவை மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமர், இராமர், பலஇராமர். கிருஷ்ணர், கல்கி என்பனவாகும்.

அல்லல்படும் அடியார்கள் அனைவரதும் துயர் தீர ஸ்ரீதேவி, பூதேவி சமேத வேங்கடேசவரதராஜப் பெருமான் தேரேறி வீதி உலாவரும் காட்சியைக் கண்டு வணங்கி அருள்பெறுவோமாக; ★

**மு. சுவாமிநாதன்**
அறங்காவலர்.


"ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் பாரில் இடர்தீர்த்திட தேரேறி வருகிறார்!"

**ராணி நகை மாளிகை**
63, கன்னாதிட்டி (R G பில்டிங்)
யாழ்ப்பாணம்;

சரடியால் மூவுலகளந்த கனைப்போ,
பாரடியார் பாவம் தீர்க்கப் பகந்தேரேறி
வருவாய் பரந்தாமா!

**ஹோட்டல் றொலெக்ஸ்**
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்;

கண்டோம், கண்டோம் கொண்டல் வண்ணனின்
தேர்பவனியை இன்று!

**நியூ புஸ்பா நகை மாளிகை**
284, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்;

பார்த்தனுக்கு சாரதியாய் பாரதப்போர் முடித்தாய்;
பக்தருக்கு வத்சலனாய் பகந்தேரேறிப்
பழவினை முடிப்பாய்!

★ **லிங்கம் கூல்பார்** ★
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

ஆலினிலைப் பாலகனாய் அவதரித்தாய்;
அருட்தேரேறி அடியார்க்கு அருள்பாலிப்பாய்!

★ **யோகு ரேடிங்** ★
332. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

அத்தியென்ன மூலமென்ன ஆலில் மேவும் அச்சுதா!
சித்தமிக மகிழ்ந்து சித்திரத் தேர் வருவாய்!

**அன்பர்**
யாழ்ப்பாணம்.

தேவதேவனுக்கும் எம் பெருமான் நீ;
தேரேறி வந்து திருவருள் பாலிப்பாய்!

**மகேந்திரலிங்கம்**
யாழ்ப்பாணம்.


மலர்வெளியீடு:
தேவஸ்தான
அறங்காவலர் சபை
அமைப்பு: ரீ. பி. லிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அலுமாரி, புத்தக அலுமாரி, சோகேஸ், மேசை, சாப்பாட்டு மேசை, தையல் மெஷின், கட்டில்கள், மெத்தைகள், கந்தோர் மேசை, கதிரைகள், கதிரை செற்றிகள், குசன் செற்றிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு; 07, கைலாசபிள்ளையார், கோவில் பின் வீதி, நல்லூர். [22749]

## மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் [சைவம்/றோம் க/ கிறிஸ்தவம்], வர்த்தகம் விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம், ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் [விடைகளுடன்] மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582, Stanley Road Jaffna. [சி/3541]

## சங்கீதம்

ஆண்டு 6 இல் இருந்து ஆண்டு 11 வரையும் வட இலங்கை சங்கீத சபையின் தரம் 1, 2, 3, 4 இற்கும் வாய்ப்பாட்டு வகுப்புகள் இன்று (விஜயதசமி) மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகும். தனிப்பட்ட வகுப்பும் உண்டு. திறமைமிக்க ஆசிரியையினால் கற்பிக்கப்படும். N.K. குகன் மாஸ்ரர், பண்டிதர் வீதி, சுன்னாகம் தெற்கு. [22764]

## மயூரதி வெளியீடு

கடந்த 4 வருட O/L வினாத்தாள்களும், விடைகளும் ரூபா 55-00. மேலதிக வினாத்தாள்களும் ரூபா 125-00. பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, மகிலன், ஸ்ரீகாந்த தனலக்ஷ்மி, சுன்னாகம் மற்றும் புத்தகசாலைகளில் கிடைக்கும். (4984)

## O/L கணிதம்

G.C.E. (O/L) கணிதம் மீட்டல் வகுப்புகள் இன்று (விஜயதசமி) மாலை 4-30க்கு ஆரம்பமாகின்றன. ஆண்டு 11ற்கு செல்ல இருக்கும் மாணவர்க்கான தனி வகுப்பும் ஆரம்பமாகின்றது. N.K. குகன் மாஸ்ரர், பண்டிதர் வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். [22763]

## ஆண்டு 6 அனுமதி

பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் 01 - 10 - 92 முதல் 16 - 10 - 92 வரை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். Bond, Book - Stall, 582, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-3539]

## ஆண்டு - 5 புலமைப் பரிசில்

அடுத்த புலமைப் பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582, Stanley Road, Jaffna. [சி-3540]

---

வெளிவந்துவிட்டது!

**மனைப்பொருளியல்**
[ஆண்டு 10—11]
மாதிரிகை
வினா-விடை

ஆக்கம்:
செல்வி
**யசோதா துரைசிங்கம்**

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.
[22759]

## தவறிவிட்டது

இணுவில் துரை வீதிக்கும், நாச்சிமார் கோவிலுக்கும் இடையில் பவுண் சங்கிலி சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்து ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும்: கே. நித்தியானந்தன், தவில் வித்துவான், இணுவில். (22772)

---

**BECON**
**STUDY CENTRE**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**A/L 93**
*Day Classes*
தூய/பிரயோக கணிதம்
**திரு. நல்லையா**
ஆரம்பம்:
06-10-1992
செவ். காலை 8 மணி.
(சி-3548)

---

Pure/App.
**Mr. குணசிங்கம்**
B. Sc. (Hons)
★ DAY REVISION & -PAPER ★
ஆரம்பம்:
**06-10-92**
11 a. m.
**சயன்ஸ் சென்ரர்.**
எழிலகம் முன்,
யாழ்ப்பாணம்.
[சி-3444]

---

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
**A/L 93**
**Day Classes**

பொருளியல் — பிரபாகரன்
கணக்கியல் — Saam
வர்த்தகம் — பசில்
அளவையியல் — சோதி
அரசியல் — கியூபேட்
இந்துநாகரிகம் } இந்துசமயம் } — அருள் நங்கை

மாலை நேர வகுப்புகள்
தமிழ் — குழந்தை
புவியியல் — குணராஜா
ஆரம்பமாகிவிட்டன.
[சி-3550]

---

# வித்தியாரம்பம்


கலை வகுப்புகளுக்கான வித்தியாரம்பம் பின்வரும் ஆசிரியர்களினால் இளந்தொண்டர் சபையில் திங்கட்கிழமை (05 - 10 - 1992) பிற்பகல் 1 மணி அளவில் நடத்தப்படும்:

| | |
|---|---|
| பண் | — திரு. வி. சிவஞானசேகரம் |
| சங்கீதம் | — திரு. மா. ஸ்ரீரங்கநாதன் |
| வயலின் | — திரு. உ. இராதாகிருஸ்ணன்<br>— து. குகரஞ்சினி |
| மிருதங்கம் | — திரு. க. ப. சின்னராசா<br>— திரு. வி. இளங்குமரன் |
| நடனம் | — திருமதி S. ஸ்ரீமதி |
| ஹார்மோனியம் | — திரு. M. கண்ணன் |
| சித்திரம் | — திரு. செ. வரதராஜா |

"சைவப் பணிமனை" இளந்தொண்டர் சபை,
**இணுவில் கந்தசுவாமி கோவில்.**
[22770]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண ஆத்ம சாந்தி அழைப்பும்



## திருவாட்டி தவமணி சிவகுருநாதன்

எமது குலவிளக்கு திருவாட்டி தவமணி சிவகுருநாதன் அவர்களின் சபிண்டீகரணம் இன்று [05-10-92] திங்கட்கிழமை பகல் 10-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இதில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றோம்.

அ. இ. சிவகுருநாதன் - கணவன்,
மக்கள், மருமக்கள்.

102, அம்பலவாணர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். [22769]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 22 | 05 |
| 08 | 09 |
| 1938 | 1992 |

அமரர்
## கணபதிப்பிள்ளை செல்லத்துரை
(யாழ். ப. நோ. கூ. சங்க - லொறிச் சாரதி),
நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை கிழக்கு,
யாழ்ப்பாணம்.

எமது சக பணியாளராக 21 வருடங்கள் வாகன சாரதியாக கடமையாற்றி, 05-09-1992இல் சிவபதமடைந்த அமரர் என். கே. செல்லத்துரை அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

போக்குவரத்துப் பகுதி பணியாளர்கள்,
யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம் வ. து.,
289, 291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(22755)

---

**யாழோசையின்**
**இசை வகுப்புகள்**
61, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.

வாய்ப்பாட்டு
வயலின்
புல்லாங்குழல்
கிற்றார்
ஓகன்
ஆகியன
**05 — 10 — 1992**
[விஜயதசமி] இன்று
5 மணிக்கு
ஆரம்பிக்கப்படும்.
[22766]

---

யாழ். இந்துக் கல்லூரி
**பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுக்கு**
# கல்லூரி மைதான விரிவாக்கம்-கட்டம் II

மேற்படி திட்டத்திற்கு நிதி சேகரிப்பதற்கான பரிசுச் சீட்டு விற்பனை 02 - 10 - 92 அன்று கலைமகள் விழாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சங்க உறுப்பினர்கள் தயவுசெய்து பொருளாளர் திரு. நா. உலகநாதன் அவர்களிடமிருந்து பரிசுச் சீட்டுக்களைப் பெற்று, விற்பனை செய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தயவு செய்து பொருளாளருடன் 15 - 10 - 92 இற்கு முன்னர் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்,
செயலர்,
பழைய மாணவர் சங்கம்,
யாழ். இந்துக் கல்லூரி. (சி/3446)

---

**New Science Academy**
Kannathiddy Road.
Jaffna.
★ மீண்டும் ஆரம்பம் ★
**DAY CLASS**
CHEMISTRY
By
சண் (B. Sc.)
Tue., Thu 9 - 00 — 10-00
ஆரம்பம்:
06 - 10 - 1992
(சி-3558)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இப்போது தேவை வீரமும், வல்லமையும்

சக்தி வழிபாட்டின் மகிமையை எடுத்தியம்பும் விழாக்களில் ஒன்றான நவராத்திரி விழா இன்று நிறைவெய்து கின்றது. சக்தி வழிபாடு தொன்மையானது. இயற்கையைத் தாயாகக் கருதி தனக்கு வாழ்வும் வளமும் தருமாறு இறைஞ்சுகின்ற மனித உணர்வின் படிமமே சக்திவழிபாடு.

அறிவியலின் பிரகாரம்—விஞ்ஞானக் கோட்பாட்டின் படி—சக்தி என்றால் ஆற்றல். உலகத்தை இயங்கச் செய்வது இந்தச் சக்தி இச் சக்தி பல வடிவங்களை உடையது. அத்துடன் சக்தி ஒரு வடிவத்தில் இருந்து இன்னொரு வடிவத்துக்கு மாறவல்லது.

அறிவியல் கோட்பாடு சார்ந்த வகையிலேயே சக்தியை, அம்பிகையாக, துர்க்கையாக, இலக்குமியாக, சரஸ்வதியாக, பராசக்தியாக பல வடிவங்களில் வைத்து இந்துக்கள் வணங்குகிறார்கள்.

சக்தி என்றால் ஆற்றல், ஆண்மை, விசை, வீரம், வல்லமை, ஆக்கம், ஊக்கம் என்றும் இன்னும் பல பொருள்களும் உண்டு. இங்கேயும் சக்தி என்ற ஒரு சொல் பல பொருள்களாகிறது. அதாவது பல வடிவங்கள் பெறுகிறது.

எப்படிப் பார்ப்பினும் சக்தியின் மூலம் ஒன்றே அது இயற்கையின் ஆற்றல். பூமி உட்பட்ட இந்தப் பிரபஞ்சத்தை இயக்கும் ஆற்றல். ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே என்றவாறு உலகத்தை இயங்கச் செய்யும், ஆடச்செய்யும்ஆற்றலே சக்தி.

இந்து சமயத்தில் ஆற்றல் சிவனாகவும் அந்த ஆற்றலைத் தருகின்ற அல்லது இயக்குவிக்கின்ற சக்தியாக அம்பிகையும் உருவகிக்கப்படுகிறார்கள். சிவனும் பராசக்தியும் ஒன்றே எனுமாப் போல ஆற்றலும் சக்தியும் ஒன்றே. ஒன்றின்றி மற்றதில்லை என்ற நிலை.

எமது மனித வாழ்வை — குடும்ப வாழ்வை — எடுத்துப் பார்த்தாலும், அடித்து அச்சுறுத்துபவன் தந்தை. அவ்வேளை அணைத்து ஆதரவு நல்குபவள் அன்னை. இங்கே ஒன்றின் தாக்கத்தை ஈடு செய்ய மற்றொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதுவே இயற்கைச் சமவிதியின் நியதியாகிறது.

அன்னை - தாய் - சக்தி அன்பின் வடிவம். அருளின் படிமம். சேவையின் சின்னம். மற்றவர்களுக்காக - நாயகனுக்காக — மக்களுக்காகத் — தன்னை தேய்த்துக் கொள்ளும் தியாகத்தின் சின்னம்.

அதனால் அன்னை ஒப்பற்றவள் ஆகின்றாள். சகல சீவராசிகளுக்கும் தாயாக விளங்குபவள் பராசக்தி. அதன் பொருட்டும் அவளைப் பல வடிவங்களில் காண்கிறோம்; வணங்குகிறோம்.

அசைவறு மனமும் ஆண்மையும் சேர்ந்தது வீரம். வாழ்க்கை வளமுடன் சிறக்க வேண்டுவது பொருட்செல்வம். உயிர்க்கு உற்றதுணையாக விளங்குவது கல்வி ஞானம்.

இவை மூன்றும், பல வகைகளாலும் ஒடுக்கப்படும், நெருக்கப்படும், அழுத்தப்படும் தமிழனுக்கு இதற்கு முன்னர் இருந்ததைவிட இப்போது அவசியம் தேவை; அதிகம் தேவை. அவற்றிலும் எமது உரிமைகளைப் பெறவும், பேணவும் பிரதான தேவை வீரம். எந்தத் துன்பத்தையும் தாங்கும் வல்லமை.

நாடெங்கும் நடக்கும் நவராத்திரி விரதத்தால் அவை தமிழருக்கு பெரிதும் கிடைப்பதாக.

# பிரேமாவின் இந்திய விஜயம்; கூட்டறிக்கை வெளியானது

கொழும்பு, அக். 5

ஜனாதிபதி பிரேமதாஸாவின் இந்திய விஜயத்தின் முடிவில் இலங்கை இந்திய கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

இனப்பிரச்சினைக்குச் சகல தரப்பினரும் சம்பந்தப்படும் சமாதான சமரச தீர்வு காண இலங்கை அரசு உறுதி கொண்டிருப்பதாகஜனாதிபதி பிரேமதாஸா வலியுறுத்தியிருக்கிறார்.

இதேவேளை—ஐக்கிய இலங்கையினுள் தமிழர்களின் சட்டபூர்வ அபிலாஷைகளை நிறைவேற்ற நீதியான, சாத்தியமான தீர்வை தமது முயற்சியின் மூலம் இலங்கை காணும் என்ற நம்பிக்கையை இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் வெளியிட்டுள்ளார்.

இந்திய-இலங்கைக் கூட்டறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

## தெற்கில் மீண்டும் ஜே.வி.பி.; முளையிலேயே முறியடிப்பு

கொழும்பு, அக். 5

தென்னிலங்கையில் ஜே.வி.பி. இயக்கத்தினர் தலை தூக்க எடுக்கப்பட்ட முயற்சி ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக முக்கிய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். பொலீஸாரினால் தற்போது தேடப்பட்டு வரும் முக்கிய சந்தேக நபர் ஒருவர் தமது மற்றொரு சகாவுக்கு எழுதிய முக்கிய கடிதம் ஒன்றையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## லங்கா ஆயுர்வேத கல்லூரி; மாகாணசபை கையேற்கும்

யாழ். லங்கா ஆயுர்வேதக் கல்லூரியை வடக்கு-கிழக்கு மாகாணசபை பொறுப்பேற்கவுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகள் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார மகளிர் விவகார அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ளன.

லங்கா ஆயுர்வேதக் கல்லூரி 1925ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகிறது; வட இலங்கை சுதேசிய மருத்துவசபை இதனை நடத்தி வருகிறது;

வைத்தியக் கல்லூரியை பொறுப்பேற்கும் முதல் நடவடிக்கையாக கல்லூரியில் தற்போது பயிலும் மாணவர் எண்ணிக்கை, விரிவுரையாளர் எண்ணிக்கை போன்ற விவரங்கள் மாகாணசபையினால் திரட்டப்பட்டுள்ளன.

லங்கா ஆயுர்வேதக் கல்லூரியை அரசு பொறுப்பேற்று நடத்த வேண்டும் என்ற கோரிக்கை கடந்த ஐந்து வருடங்களாக விடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (த-ம-3)

## சுதந்திரக் கட்சியில் பிளவு ஏற்படுமாம்

சுதந்திரக் கட்சியில் பிளவு ஏற்படலாம் என்று கட்சியின் தலைமைப்பீடம் தற்போது அச்சமடைந்துள்ளதாக அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

கட்சியில் உள்ள பிரமுகர்கள் சிலர் உட்பட கட்சி உறுப்பினர்கள் பலர் ஆளும் கட்சியில் சேரலாம் என்றும் கட்சித் தலைமைப்பீடம் அஞ்சுவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திரக்கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி இச் செய்திகள் பிரசுரமாகியுள்ளன. (த-எ)

# சக்தி வழிபாடு தொன்மையானது

வரலாற்றுப் பின்னணியில் சிந்துவெளிக் காலம் மிகவும் தொன்மையானதாக காணப்படுகிறது. சிந்துவெளிப் பிரதேச எச்சங்களைக் கொண்டு ஆராயும்போது தரைப் பெண் என்னும் பூமாதேவியை சிந்துவெளி மக்கள் வணங்கினார்கள் என்று கலாநிதி மார்க்கன் கூறுகிறார்.

மேலும் அங்கு அம்பிகையின் அருள்வடிவங்களான துர்க்கை, பார்வதி, இலக்குமி போன்ற வடிவங்கள் வழிபடப்பட்டன.

இருக்கு வேதத்தில் எடுத்தாளப்பட்ட வழிபாட்டை இயற்கை வழிபாடென்பர். உலகில் இயல்பாகக் காணப்படும் நிலம், தீ, காற்று, நீர், விடியற்பொழுது, இராப்பொழுது போன்றவற்றை வணங்கினார்கள். தொடர்ந்து விடியற்பொழுதின் தெய்வமாக உஷையையும் இராப்பொழுதின் தெய்வமாக இராத்திரியையும் வணங்கியதாகக் காணமுடிகிறது.

சங்ககாலத்தில் கொற்றவை வழிபாடு மிகவும் பழமை வாய்ந்தது. மேலும் தமிழ் இலக்கியங்களில் பெருமோட்டுக் காடு கிழாள், தொண் மூதாட்டி, முந்தை மூதாட்டி, முது மூதாட்டி, கானமர் செல்வி, காடுகிழாள், காடு கெழு செல்வி (முருகனைப் பெற்றவள்) என்னும் தொடர்கள் சக்தியைக் குறித்து நிற்கின்றன. மதுரையில் கடவுளும், சிதம்பரத்தில் தில்லைவளும் தாய்த்தெய்வங்கள் உறைந்த பதிகளாகும். இவை இன்றும் சிறப்புற்று விளங்குகின்றன. இன்னும் அனேக தாய்த் தெய்வ - சக்தி வழிபாட்டு - ஆலயங்கள் தமிழ் நாட்டில் உண்டு.

### பிறநாடுகளில்

எகிப்து, கிரேக்கம், உரோமாபுரி போன்ற நாடுகளில் தாய்த்தெய்வ வழிபாடு நிலவியதாக ரோமிலா தாப்பர் (Romila Thapar) என்பவர் கூறுவார். கமேரியாவில் உம்மா என்னும் தாய்த் தெய்வ வழிபாட்டில் அவளை நானா, நீனா, இனன்னா, நின்னில் என வணங்கியிருக்கிறார்கள்.

பாரதியாரும் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட தலைப்புகளில் சக்தியைப் பாடியுள்

- சி. மு. தம்பிராசா-

ளார். அவற்றுள் "சிவசக்தி புகழ்" என்னும் பகுதியில் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். பாரதியார் பாடலில் காளி, இலக்குமி, சரஸ்வதி என்னும் சக்திகள் காணப்படுகின்றன.

### சக்தியின் சிறப்பு

சக்தியின் திருவிளையாடலை அணுமுதல் அண்டம், பகிரண்டம் வரை காண முடிகிறது. ஆற்றலுக்குரியவன் இறைவன். அந்த ஆற்றலின் இயக்கத்திற்குச் சக்தி என்று பெயர். இதற்கு நவீன விஞ்ஞான சக்திகள் அரண் செய்கின்றன. சக்தியை தாயாக வடிவமைத்து வணங்கும் தொன்மை மிக்க சமயப் பண்பாட்டின் ஓர் அம்சமே நவராத்திரியும் விஜயதசமியுமாகும்.

## விசாரணை 17ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, அக். 5

சர்வோதய இயக்கம் பற்றி செய்யப்பட்டுள்ள புகார்கள் பற்றிய விசாரணை நவம்பர் மாதம் 17 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கை பற்றி ஆராய நியமிக்கப்பட்ட எழுவர் கொண்ட குழு இவ் விசாரணையை மேற்கொள்ளும். (ம)

## பிரேமா டாக்காவில்!

'சார்க்' நாடுகளுக்கான தமது விஜயத்தின் ஒரு கட்டமாக ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று பங்களாதேஷ் தலைநகர் டாக்கா போய்ச் சேர்ந்தார்.

இன்று பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியாவுடன் அவர் உத்தியோகபூர்வ பேச்சுக்களை நடத்துவார். பின்னர் அவர் செய்தியாளர் மாநாடு ஒன்றில் கலந்து கொள்வார்.

கடந்த சனிக்கிழமை திரு. பிரேமதாஸா பூட்டானுக்கு விஜயம் செய்தார். (உ-எ)

## கௌரி விரதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 5

கேதார கௌரி விரதம் இன்று தொடக்கம் பல அம்மன் ஆலயங்களில் ஆரம்பமாகிறது. 21 நாட்கள் இவ் விரத அனுஷ்டானங்களும் விசேட பூசைகளும் இடம் பெறும்.

★ தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் கேதார கௌரி விரத விழா வெகு சிறப்பாக நடைபெறும். ஆயிரக் கணக்கான பெண் அடியார்கள் 21 நாள் விழாக்களிலும் கலந்து கொள்வர்.

★ சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்திலும் இன்று தொடக்கம் 21 நாட்களுக்கு கேதார கௌரி விரத விழா நடைபெறும்.

★ கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தில் இன்று முதல் கேதார கௌரி விரதம் 21 நாட்களுக்கு நடைபெற்று கடைசி நாளில் கௌரிக்காப்பு வழங்கப்படும். (அ-31)

## நேர்முகப்பரீட்சை

உடுவில், அக். 5

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்குரிய நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் நடைபெறும்.

பட்டப் பின் கல்வி டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ந-152)

## யாழ். நகருக்கு 14 வண்டில்கள்!

யாழ்ப்பாணம், அக். 5

யாழ். மாநகரசபைச் சுத்திகரிப்பு வேலைகளுக்காக 14 வண்டில்கள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்படவிருக்கின்றன.

யாழ் மாநகர சபைப்பகுதி வீதிகளில் சேரும் குப்பைகள் இந்த வண்டில்கள் மூலம் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு எடுத்து வரப்பட்டு, அங்கிருந்து டிராக்டர் மூலம் கல்லுண்டாய்ப் பகுதிக்குக் கொண்டு செல்லப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் இந்த வண்டில்கள் கப்பலில் எடுத்து வரப்பட உள்ளன. (உ-3)

## பெருமாள் கோவில்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விருந்தாகவும், மனதிற்கு பக்தி புகட்டுவனவாகவும் காட்சியளிக்கின்றன. இத்தேரை திருவிடைமருதூரைச் சேர்ந்த அனுபவமும், திறமையும் வாய்ந்த ஸ்ரீ. சி. சுப்பிரமணியம் ஆச்சாரியார் குழுவினர் நிர்மாணித்தார்கள்.

ஸ்ரீமந் நாராயணனின் கிருபா கடாட்சத்துடன் 1978 ஆம் ஆண்டு இவ்வாலயத்தின் வானளாவியுயர்ந்த இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டது. தென் இந்தியா கீழக்கரை நாகலிங்க ஸ்தபதிகள் குழுவினர் இவ்வரிய கைங்கரியத்தை நிறைவேற்றினார்கள். எண்பத்திநான்கு அடி உயரமும், ஏழு நுழைவாயில்களையும் கொண்ட இக் கோபுரம் இராமாயணம், மகாபாரதம், பகவதம் ஆகிய காவியங்களைச் சித்தரிக்கும் சிற்பங்களைத் தன்னகத்தே கொண்டு பக்தர்களுக்கு பக்திப் பரவசமூட்டுகிறது.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பதற்கு மேலும் மெருகூட்டுவனவாக இச்சிற்பங்கள் விளங்குகின்றன. இவ்வாலயத்தின் வெளிப்பிரகாரத்தின் முன் நுழைவாயிலும் தெற்குப்பக்க நுழைவாயிலும் வளைவுகள் அமைக்கப்பட்டு கோயிலின் சுற்றாடல் புதுப் பொலிவு பெற்றுக் காட்சியளிக்கின்றது.

### திருவிழாக்கள்

இவ்வாலயத்தின் வருடாபிஷேகம் ஆனி மாதத்தில் வருகிற ரோகிணி நட்சத்திரத்தன்று நடைபெறுகின்றது. வருடாந்த மகோற்சவம் புரட்டாதி மாதத் திருவோண நட்சத்திரத்தன்று தீர்த்தோற்சவம் வரக் கூடிய வகையில் கணக்கிட்டு வைக்கப்படுகின்றது. விஷேச உற்சவங்களாக ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம், ஸ்ரீ இராம நவமி, ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, ஸ்ரீ இராமானுஜர் ஜெயந்தி, ஸ்ரீ ஆண்டாள் ஆடிப்பூர பூர்வகர்மம், ஸ்ரீ வரலட்சுமி விரதம், திருவூஞ்சல், விஜயதசமி, ஆஞ்சநேயர் பொங்கல், ஆஞ்சநேயர் ஜெயந்தி, மாட்டுப் பொங்கல், வைகுண்ட ஏகாதசி முதலியன நடைபெறுகின்றன.

அடியார்களினதும், பத்மசாலிகளினதும் பேருதவியால் இவ்வாலயம் மேலும் புதுப் பொலிவு பெற்று விளங்க ஸ்ரீமந் நாராயணனின் கிருபா கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், அக். 5

நவராத்திரி விழாவின் இறுதி நாளும், விஜயதசமியுமான இன்று பல இடங்களிலும் விழாக்கள் நடைபெறவுள்ளன. பல பாடசாலைகளிலும், ஆலயங்களிலும், சிறுவர்களுக்கு வித்தியாரம்பமும் செய்து வைக்கப்படும்.

★ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் இன்று காலை 9 மணிக்கு வாணி விழா நடைபெறும்.

★ இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைத் தலைமையகத்தின், கொழும்புத்துறை வீதியில் உள்ள கல்வி நிலைய மாணவர்களின் வாணி விழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறும்.

★ யாழ். பிரதேச உள்ளூராட்சித் திணைக்களத்தின கலைமகள் விழா இன்று மு. ப. 10 மணிக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா தலைமையில் நடைபெறும்.

★ நவாலி விரேஷன் அ. மி. த. க. பாடசாலையில் இன்று மு. ப. 9 மணிக்குக் கலைமகள் விழா நடைபெறும். விழாவில் பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். இரத்தினராஜாவும், சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வீரபத்திரரும் கலந்து கொள்வர்.

★ இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையின் விஜயதசமி விழா இன்று மாலை நடைபெறும். விழாவில் இசையரங்கும், இளம் தொண்டர் சபை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் பரிசில் வழங்குதலும் இடம்பெறும்.

★ ஆனைப்பந்தி நாவலர் கல்விக் கழகத்தின் வாணி விழா இன்று இரவு 7 மணிக்கு கழக மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழோசை இயக்குநர் பா. கண்ணனின் வயலின் சோலோ இசைக் கச்சேரி சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும்.

★ வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் இன்று காலை கல்லூரி அதிபர் திரு. இ. விஜயரத்தினம் தலைமையில் வாணி விழா நடைபெறும்.

★ இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவுக் கிளையினர் நடத்தும் வாணி விழா இன்று காலை 9 மணிக்கு சுண்டுக்குளியில் நடைபெறும்.

அதிபர் திரு. சிவராஜா சிறப்புரையாற்றுவார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

★ உருமபராய் இந்துக் கல்லூரி வாணி விழா இன்று காலை நடைபெறுகிறது. விழாவில் நவாலியூர் நா. சச்சிதானந்தன் 'தத்துவ விஞ்ஞான நோக்கில் நவராத்திரி' என்னும் பொருளில் சிறப்புரை ஆற்றுவார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

★ சுண்டுக்குளி கலட்டிப் புலம் ஞானவைரவர் ஆலயத்தில் இன்று சுண்டுக்குளி சைவ மகா சபையினர் வித்தியாரம்பம் வைபவத்தை நடத்துவர். பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும்.

★ மல்லாகம் மகா வித்தியாலயத்தில் விஜயதசமி விழா இன்று காலை 8 மணிக்கு நடைபெறும். ஏழாலை கொத்தணி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுவார்.

★ யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்கள் இன்று காலை 9 மணிக்கு ஆஸ்பத்திரி வைரவர் ஆலயத்தில் நவராத்திரி விழாவைக் கொண்டாடுவர். ஆஸ்பத்திரியின் கிளினிக்குகள், வார்ட்டுகளிலும் நவராத்திரி நிகழ்வுகள் இடம்பெறும்.

★ இருபாலை தமிழ் மாமன்றம் நடத்தும் நவராத்திரி விழா இன்று காலை மன்ற மண்டபத்தில் நடைபெறும். யாழ். மாவட்ட ரீதியில் "சகலகலாவல்லி" மனனப் போட்டியும் "சக்தி வழிபாடு" என்னும் பொருளில் பேச்சுப் போட்டியும் விழா நிகழ்ச்சிகளில் இடம்பெறும்.

[அ-30-15-162-17]

---

## யாழ்ப்பாணம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்த நடைமுறைப்படி — ஹெலி மூலம் — கொழும்புக்கு அழைத்துச் செல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுப்படை தலைமையகத்துடன் இது தொடர்பாக பேச்சுக்கள் கொழும்பில் நடைபெறுவதாகவும் —

இணக்க நிலை ஏற்படும் பட்சத்தில் ஓரிரு நாட்களில் முதல் தடவையாக ஹெலிக்கொப்டர் மூலம் நோயாளி ஒருவர் கொழும்புக்கு கொண்டு செல்லப்படுவார் என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தான் பணியாற்றி வரும் உலக நாடுகள் பலவற்றில் சொந்தமாக ஹெலிக்கொப்டர்களை பயன்படுத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-3-5)

---

## ரூ 5கோடி...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

றொக்கட்டுகள் 280, பல்வேறு வகையான 3 லட்சம் தோட்டாக்கள் ஆயுதக் கிடங்கில் இருந்ததாகவும் —

முகாமிலிருந்த இரு வாகனங்கள் மூலம் விடுதலைப் புலிகள் இவற்றைக் கொண்டு சென்றதாகவும் தெரியவருவதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.

(உ-எ-10)

---

## படையினர்...

[1 ஆம் பக்கம் தொடர்ச்சி]

செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கிளைரத் தேடி வேட்டை நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டது.

இக் கொள்ளைக் கோஷ்டியினர் இது வரை சுமார் 45 கொள்ளைகளில் ஈடுபட்டதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாம்.

(உ-10)

---

## படை யாழ். வர...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

செய்தியாளர் கேட்டபோது அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

விடுதலைப் புலிகள் பாதுகாப்புப் படையினர் மீது நடத்தும் தாக்குதல் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

"நாங்கள் ஒரு கெரில்லா இயக்கம். எங்கு தாக்க வேண்டும் என்று கருதுகிறோமோ அங்கு தாக்குவோம்" — என்றும் அவர் கூறினார்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிமுறைகளை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் அமைதி சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை விடுதலைப் புலிகள் தலைவர்களுக்கு இல்லை என்று பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவித்தார். [உ-3]

---

குமரப்பா, புலேந்திரன் உட்பட

# 12 வேங்கைகள் நினைவாக இன்று நினைவு நிகழ்ச்சிகள்

## வன்னியிலும் அஞ்சலி கூட்டங்கள்

யாழ்ப்பாணம், அக். 5

தியாகிகள் லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் இன்று தமிழீழம் எங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்நினைவு நாளையொட்டி யாழ். மாவட்டத்தில் வல்வெட்டித்துறை — தீருவிலில் இன்று மாலை 4.45 மணிக்கு மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்துக்கு முன்னர் உடுப்பிட்டியில் இருந்தும் நெடியகாட்டில் இருந்தும் சகல பகுதிகளைச் சேர்ந்தோரும் பேரணிகளில் கலந்து கொண்டு தீருவிலை வந்தடைவர்.

வன்னி மாவட்டத்தின் வட்டக்கச்சி, கனகராயன்குளம் ஆகிய பகுதிகளில் இன்று இரவு 8.30 மணிக்கு மாபெரும் நினைவஞ்சலிக் கூட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள், கொக்காவில் சிங்களப் படை முகாம் தகர்ப்பின்போது வீரமரணம் அடைந்த மாவீரர்கள், இதே தாக்குதலில் விழுப்புண் அடைந்து, சிகிச்சைக்காக இந்தியா செல்லும் வழியில் வங்கக் கடலில் சிங்களப் படையினருடனான மோதலில் வரலாறாகிய லெப். கேணல் சந்திரன் (கண்ணாடி) ஆகியோரை நினைவு கூரும் முகமாக இந் நினைவஞ்சலிக் கூட்டங்கள் இடம்பெறும்.

இந்நிகழ்ச்சியில் கிளிநொச்சி, வவுனியா கோட்டங்களைச் சேர்ந்த மாவீரர்களும் நினைவு கூரப்படுவர்.

[ஒ-த-144-17]

---

## இளைப்பாற்று சம்பளம்

ஓய்வூதியத் திணைக்களத்தினால் இது காலவரை செய்யப்பட்டு வந்த இளைப்பாற்றுச் சம்பளம் வழங்குவது தொடர்பான சில கருமங்கள் கடந்த வியாழன் முதல் பிரதேச செயலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இனி இளைப்பாற்றுச் சம்பளம் — கைம்பெண் — அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பளம், மரணச் சகாயப் படி ஆகியன பிரதேச செயலகங்களினால் இனி கையாளப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

---

## பொலீஸ் நிலையம் தாக்கப்பட்டது

புதுடில்லி, அக். 5

திரிபுரா மாநிலம் - கமிகாநகர் பொலீஸ் நிலையம் மீது 50 பேர் கொண்ட தீவிரவாதிகள் குழு ஒன்று நேற்று அதிகாலை நடத்திய தாக்குதலில் நான்கு பொலீஸ்காரர்கள் கொல்லப்பட்டனர்; 2 பொலீஸார் படுகாயமடைந்தனர்.

பொலீஸ் நிலையத்தில் இருந்த பொலீஸ்காரர் ஒருவர் தமது ஆயுதத்துடன் தீவிரவாதிகளுடன் ஓடிவிட்டார் என்று சொல்லப்படுகிறது.

தீவிரவாதிகள் பொலீஸ் நிலையத்தில் இருந்து 16 ரைபிள்களையும் எடுத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

---

## கல்கத் சென்னை விஜயம்

சென்னை, அக். 5

இலங்கை, வடக்கு-கிழக்கு பகுதிகளில் இந்திய அமைதிப் படைத் தளபதியாகப் பணிபுரிந்த ஜெனரல் கல்கத் நேற்று முன்தினம் சென்னைக்கு விஜயம் செய்தார்.

அவரை ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம் மற்றும் கோவா பிரதேச தலைமை இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் முல்லே வரவேற்றார்.

சென்னையில் தங்கியிருக்கும் போது ஜெனரல் கல்கத் முக்கிய இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

## இன்று மரம் நடுகை

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் இன்று காலை கோட்டங்கள், கொத்தணிகள் மட்டத்தில் மரம் நடுகைத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் மேற்படி கழகத்தினர் 80 லட்சம் ரூபா செலவில் மரநடுகைத் திட்டத்தை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தி வருவதாகவும் —

முதற் கட்ட நடவடிக்கையாக இன்று முதற் பாடசாலைகளுக்கு மரக்கன்றுகள் விநியோகம் ஆரம்பிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் இத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கிறார்.

---

# மரண அறிவித்தல்கள்

## திரு. V. E. A. பரசிவம்

(ஓய்வு பெற்ற அதிகாரி இலங்கை தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.)

திரு. V. E. A. பரசிவம் அவர்கள் சனிக்கிழமையன்று (3 - 10 - 92) காலமாகிவிட்டார். இவர் கரம்பனைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவராவார்.

அன்னார் காலஞ்சென்ற கனகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், ரஞ்சனி (கொழும்பு), சாமினி (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற காரைநகர் வலந்தலையைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் தில்லையம்பலம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சுருவில் V. E. A. பரமசிவம், பொகவந்தலாவ கனகசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான மலேசியாவைச் சேர்ந்த கனகநாயகம் (பரிஸ்டர்), குலசேகரம் (உயர் நீதிமன்ற நீதியரசர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (5 - 10 - 92) காலை 10 மணிக்கு எமதில்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
செல்வி ப. சாமினி.

இல. 8, மருதடி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

[22773]

---

## வடிவேலு கணேசமூர்த்தி

(முன்னாள் பருத்தித்துறை கணேஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் V.V.K.)

தும்பளை வீதி, கல்வடி ஒழுங்கை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வந்தவருமான அமரர் வடிவேலு கணேசமூர்த்தி அவுஸ்திரேலியாவில் அவரது இல்லத்தில் 01-10-1992 இல் காலமானார்.

இவர் சிவரத்தினத்தின் அன்புக் கணவரும், புவனேந்திரராசா (அவுஸ்திரேலியா), தெய்வேந்திரராசா (அவுஸ்திரேலியா), தனேந்திரராசா (அவுஸ்திரேலியா), சரஸ்வதி (பருத்தித்துறை), விக்னேஸ்வரமூர்த்தி (அவுஸ்திரேலியா), பாக்கியலக்ஷ்மி (ஜேர்மனி), சிவசோதி (அவுஸ்திரேலியா), ரமணி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மங்களேஸ்வரி (அவுஸ்திரேலியா), சாந்தி (அவுஸ்திரேலியா), மஞ்சுளா (அவுஸ்திரேலியா), சத்தியமூர்த்தி (பருத்தித்துறை கவிதா ரேடர்ஸ் உரிமையாளர்), கிருஷ்ணகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், சிவா (அவுஸ்திரேலியா), உமா (அவுஸ்திரேலியா), கவிதா, கஜேந்திரன், கோபிநாத், அனுஷா, ரேணுகா (அவுஸ்திரேலியா), ரஞ்சித் (அவுஸ்திரேலியா), நிஷாந்தன் (ஜேர்மனி), டிலானி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும், செல்வராசா (செல்வராசா ஸ்ரோர்ஸ் உரிமையாளர், பருத்தித்துறை), ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவயோகமலர், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 01 - 10 - 1992 அன்று கீழ்வரும் முகவரி (அவுஸ்திரேலியா) யில் அவரது இல்லத்தில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சத்தியமூர்த்தி (மருமகன்)
கவிதா ரேடர்ஸ் உரிமையாளர்,
பருத்தித்துறை.

No. 02,
Eulaalia St,
West Ryde - 2114,
Australia

தும்பளை வீதி,
கல்வடி ஒழுங்கை,
பருத்தித்துறை.

[இ-3447]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05-10-92 இல் [illegible] வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org